தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு	திருவள்ளுவர் யாண்டு கக௲அய ஆவணி 1949—ஆகஸ்டு	மலர் ரு

விடுதலைத் திருநாள்.

நற்செய்தி.

நமது கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் மிகச் சிறப்புடன் நடைபெற்றுவரும் இராதாகிருட்டின தொடக்கப் பள்ளி, உமாமகேசுவர நடுத்தரப் பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவர் இல்லம் ஆகிய நான்கு பகுதிகளையும், 1949, ஆகஸ்டு, 15 இந்திய விடுதலைத் திருநாள் கொண்டாட்டப் பெருமகிழ்வாகத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை அருள்நிலையத்து 20ஆவது குரவர் பெருந்தகை வள்ளலார் அருட்டிரு. அம்பலவாண தேசிக சுவாமிகள், ஏற்றுக் கொண்டு நடத்தி யருளி, மேலும் அவைகளின் ஆக்கங் கருதிப் பெருநிதி ஒதுக்கிப் பாதுகாக்கத் திருவுளங் கொண்டருளி யுள்ள நற் செய்தியைப் பொழிலன்பர்களும், நம் சங்க உறுப்பினர்களும், தமிழுலகமும் தெரிந்து இன்புறும்.

இது குறித்த முழு விவரமும் புரட்டாசிப் பொழிலில் வெளியிடக் கருதுகிறோம்.

துயரம்

பேரருட் செல்வியார் பெரியநாயகத்தம்மையாரின் மறைவு.

நம் சங்கத்தின் தாயும் தந்தையு மாகிய தமிழவேளின் சிற்றன்னையார், திரு. பெரியநாயகத்தம்மையார், விரோதி, ஆடி, 12 ஆம் நாள் (27-7-1949) புதன்கிழமை பிற்பகல் 7-30 மணிக்குத் தம் 95 ஆம் ஆண்டில் மறைந்தார்கள். உயர் குடியிற் பிறந்து, உயர் குடியிற் புகுந்து, உயர்ந்த முறையில் மனையறம் காத்த அம்மையாரின் அருளும் புகழும் நாளும் நாளும் பெருகுவதாயின.

நம் தமிழவேளின் தாய் தந்தையர் அவர் தம் இளம் வயதிலே அவர்களை விட்டுப் பிரிந்தாராக, தமிழவேளையும், அவர்தம் உடன்பிறந்தார்களையும், அவர் தம் மக்கள் முதலிய சுற்றங்களையும் புரந்தளிக்கும் பொறுப்பும் மகிழ்ச்சியும் திரு. பெரியநாயகத் தம்மையாரது ஆயிற்று. நம் சங்க உறுப்பினர் திரு. வீ சு. சிதம்பரம் பிள்ளையாகிய தம் மகனினும், தம் தமக்கை மக்களையே மேலாகப் போற்றி வளர்த்தனர். தமிழவேளின் விருந்தினராகச் செல்லும் தமிழுலகப் புலவர்கள் முதலிய சங்க அன்பர்களுக்கு உள்ளங் களிக்க வேண்டும் உதவிகள் புரிந்து, தாமும் களித் துத் தமிழ வேளுங் களிக்கத் தனியன்பு காட்டி வந்தது அன்பர்கள் நாளும் நாளும் அறிந்ததே. உற்றூர், உறவினர், அறிந்தார், அறியாதார் என்ற வேறுபாடின்றி யாவர்க்கும் வேண்டும் மருந்துகளை அள்ளி வழங்கிக் காத்தவர்கள் அம்மையார் அவர்கள். இவற்றானே சங்கத்தின் பேரருட் செல்வியார் என்னும் சிறப்புக்குரியவராயினர்கள் அம்மை யார் அவர்கள்.

அம்மையார் அவர்கள், தமது செல்வக் குடும்பத் தினைச் சார்ந்தவர்கள், பணியாட்கள், விருந்தினர்கள் இரவ லார்கள் முதலிய பற்பலருக்கும் நாடோறும் தமது அறக் கரங்களால் அமுதனைய இன்சொல்லோடு நல்லமுதை வாரி வழங்கும் நெறியில் ஒரு கற்பகத் தரு, காமதேனு எனச் சிறப்பித்துக் கூறும் தன்மையர்.

உயர்திரு. பெரியநாயகத்தம்மையார் பிரிவு தமிழ வேள் நினைவோடு பெருந் துயர் தருகின்ற தெனினும், அவர்கள் ஆண்டு முதிர்ச்சியும், உடல்நலத் தளர்ச்சியும் ஒருவாறு ஆறுதல் அளிப்பனவாகும். (தொடர்ச்சி ப-ம் 136.)

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D,

(முற்றொடர்ச்சி: துணர் உரு, மலர் ச, பக்கம் 116.)

கள்ளாமை.

6. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்று தவர்.

(இ-ள்.) களவல்ல மற்றைய தேற்றுதவர்-தவஞ் செய்வாருள் களவாகாதனவாகிய பிறவற்றை நன்கு அறியாதவர்; அளவல்ல செய்து ஆங்கே வீவர்—அளவாகாதன செய்து, அவ்வண்ணமே கெடுவர், ஆகலான் தவஞ் செய்வானுவான் கள்ளாமை காக்கதன் னெஞ்சு. எ-று.

அளவு ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணம். அல்ல என்னுஞ் சொல் இரண்டனுள் முன்னதை அன் என்னுஞ் சாரியை பெறுது நின்ற குறிப்பு வினையா லணையும் பெயரென்றும், பின்னதை அது பெறுது நின்ற குறிப்பு வினைப் பெயரெச்ச முற்றென்றுங் கொள்க; பின்னதைக் குறிப்பு வினைப் பெயரெச்ச மெனினும் அமையும். ஈண்டு அல்ல என்பது இரண்டிடத்தும் ஆகாதன என்னும் பொருளது. அளவல்ல, களவல்ல என்பன ஒரு சொன்னடையவாய தொகையல் தொடர்மொழிகள், ஏகாரம் தேற்றம். மற்றையென்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த மற்றையன வென்னும் பலவின்பாற் பெயர் அள் என்னுஞ் சாரியை பெறுது மற்றைய வென நின்றது. களவிற்கு இனமாவன

அதனொடு ஒற்றுமைப்பட்டு நிற்குங் கொலை, பொய் முதலி யனவும் அதனோடு வேற்றுமைப்பட்டு நிற்குங் கள்ளாமை, கொல்லாமை, வாய்மை முதலியனவுமே. இவற்றுள் கொலை, பொய் முதலியன மன மொழிகள் இடமாக வஞ் சித்துக் கோடற் றன்மை வாய்ந்த வாதல் பற்றிக் களவாகு மாகலான், களவாகாதனவாகிய பிறவற்றை நன்கறியாத வர் என்றது கள்ளாமை, கொல்லாமை, வாய்மை முதலி யனவற்றை நன்கறியாதாரை. களவாகாதன வற்றை நன் கறியாதவர் என்றமையான் அவர் களவாகுவன வற்றையே நன்கறிவா ரென்பது பெறப்படும். அளவாகாதன என்றது அன்பின்மை அருளின்மை முதலியனவற்றை.

'முன்னைப் பாட்டாற் கள்ளுதற் பழக்கத்தால் வருங் கள்ளுதல் வேட்கை முதிர்ச்சியுறின், களவாகாதன செய்தே னல்லேன் என்று துன்புறச் செய்யு மென்றீர். கள வாகாதன செய்யாமை ஒருவரைக் கெடுக்காதே' என் றுற்கு உத்தரமாக, அவர் அள வாகாதன வாகிய அன் பின்மை முதலியன செய்து கெடுவர் என்று இப்பாட்டாற் கூறுகின்றார்.

தவஞ் செய்வாராவார் தாம் சிவத்தைச் சார்ந்து சிவத் தின் வண்ணமாய் நிற்க வுதவுஞ் சாதனமாகிய சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தின் கண் உறைத்து நிற்றற் குக் கள்ளாமை, கொல்லாமை, வாய்மை முதலிய களவா காச் சாதனங்கள் எத்துணை உபகரித்து நிற்கு மென்பதைச் சுருதி, யுக்தி, அனுபவங்களாலாயினும் காண்டல், கருதல், உரையென்னும் அளவைளாலாயினும் அறிந்தும், அவற் றைச் செய்யும் வகைகளைக் தெளிந்தும் நின்று செய்தாரா யின், அச் செய்கை அவருடைய ஆன்ம சிற்சத்தியாகிய அளவினை விளங்கச் செய்து அவர் தவத்தை முடிவுபோக்கு மென்பது ஆகமநூற் றுணிபு. இத்துணிபை யுட்கொண்டு, கள்ளாமை, கொல்லாமை முதலிய களவாகாச் சாதனங் களின் துணை வேண்டாது நின்று தவஞ்செய்வார்க்கு வினை

யும் பயன் கூறுவார், அன்னுர் களவாகுவன வற்றையே பயின்று, அதனுனே அளவாகாதனவாகிய அன்பின்மை முதலியன் செய்து தமக்குக் கேடு பயந்தே நிற்ப ரென்று கூறிய வாருயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைந்த பொழுதே கெடுவர், களவல்லாத பிற வற்றை யறியாதவர்' என்னும் உரையைத்தந்து 'மற்றைய வாவன துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய், கனி, கிழங்கு, சருகு முதலியனவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்ருமை அவற்றையே நுகர்ந்து அவ் வளவா னிறைந் திருத்தலை யறியாமை. இதனுற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது' என்னும் உரை விளக்கமுந் தந்தார்.

'மற்றைய தென்னுங் கிளவிதானே சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே' என்னும் விதிபற்றி 'கள வல்ல மற்றைய' என்பதன்கண் மற்றைய வாவன சுட்டப் பட்ட களவினை யொழித்து அதனினங் குறித்து நிற்கு மென்பது பெறப்படும். ஆயின் அழகியாராவார் களவினைக் காய், கனி முதலாயினவற்ருேடும், இவ்வாழ்வார் செய்யுந் தானத்தோடும் ஒரே யினமாகக் கருதினராதல் வேண்டும். அவை இனமாகாமை வெள்ளிடைமலை. அன்றித் துறந்தா ரிடங் காணப்படுதல் பற்றி இனமாகுமெனின், அக்கார ணத்தானே பொய், கொலை முதலியனவும் இனமாகும். ஆக, இக் குறளுக்கு 'அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைந்த பொழுதே கெடுவர், பொய், கொலை முதலிய வற்றை நுகர்து அவ்வளவா னிறைந்திருத்தலை அறியாதார்' என்னும் பொருளும் படும். இஃது வேண்டாவுரை யாக லான் அழகியார் உரைவழீஇனு ரென்க.

இப்பாட்டு என்னுதலிற்ருே வெனின்: தவஞ் செய் வாராவார் களவாகாதன வாகிய கள்ளாமை, கொல்லாமை,

வாய்மை முதலிய சாதனங்களைத் துணைக்கொள்ளாராயின் அவர் அதனனே களவாகுவனவற்றையே பயின்று அள வாகாதன வாகிய அருளின்மை முதலாயின செய்து கெடுவர், ஆகையான் அன்னுர் களவாகாதன துணை கொண்டு தவம் முதிரும் வகை செய்க. எ-து.

7. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ-ள்.) பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார் கண்—பொருளுடைமையை விரும்பிப் பொருளுடை யாருள் யாவர் மாட்டுக் கடைப்பிடி யின்றிய மனனெ கிழ்ச்சி உளதென்று பார்ப்பார்கண், அருள் கருதி அன்புடை யர் ஆதல் இல்—அருளுடைமையை விரும்பி உயிர்கண் மேல் அன்புடையராய்த் தொழிற்படுதல் இல்லை, ஆகலான் தவஞ்செய்வானுவான் கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(எ-று)

அருள், பொருள் என்பன ஆகுபெயர். கருதுதல் விரும்புதல். கருதி யென்னுஞ் செய்தெனெச்சத்திரிபு இரண்டனுள் முன்னது ஆதல் என்னுஞ் தொழிற் பெயரி லுள்ள ஆகு என்னும் வினையடியொடும், பின்னது பார்ப் பார் என்னும் வினையாலணையும் பெயரிலுள்ள பார் என் னும் வினையடி யொடும் முடிந்தன. அன்புடையர் என் பது குறிப்பு வினையெச்சமுற்று. ஆதல் என்பது தொழிற் படுதல் என்னும் பொருட்டு. அருள் கருதி யன்புடைய ராதல் என்புழி இயற்கைப் பொருளை இற்றெனக் கிளவாது ஆக்கமொடு கூறினுரெனின் குணப்பண்பு தொழிற் பண் பாய் ஆக்கம் பெற்று நின்றமையின் செயற்கைப் பொரு ளையே ஆக்கமொடு கூறினுரென்க. ஆக்கமாயின் காரணத் தின் வழியன்றே வருமெனின், அக் காரணத்தை உடம் பொடு புணர்த்த லென்றும் உத்தியாற் பெறவைத்தே ஆக் கங் கூறினுரென்க. அஃதெங்ஙன மெனின், பொச்சாப்புப்

பார்ப்பார் மாட்டு, அப் பார்த்தலினுன் அன்புடைய ராய்த் தொழிற்படுதல் இல்லை யென்றவாறு. இல் என்பது இல்லை யென்னுங் குறிப்பு வினை முற்றின் விகாரம். அஃது ஈண்டு பண்பு உணர்த்தி நின்றது.

'கனவாகாதன வாகிய கள்ளாமை, கொல்லாமை முதலிய சாதனங்கள் துணை கொண்டு தவஞ் செய்யாதார் அளவாகாதன செய்து கெடுவர் என்பதை யான் உடம் படேன். இவ்வுலகிற் பொருளுடைமையான் இன்புறு பவர் சிலரும், அஃதின்மையாற் றுன்புறு முயிர்கள் பலவு மாய் இருக்கின்றமையான், அப்பொருடையாருட் கடைப் பிடி யின்றி மனச் சோர்வு பட்டாரை என் தவத்தின் நீர் மையான் மயக்கி அவர் பொருளைக் கொண்டு பெரும் பகுதி யாகிய ஏனைய வுயிர்களுக்கு உதவுகின்றேன். இஃது அளவாகும் அன்புடைமை யாகலான் அருளாட்சி பயந்து என் தவத்தை முடிவு போக்கும்' என்ருற்கு, அஃது கன வாகு மாகலான் அளவாகும் அன்புடைமை யன்றென்றும் அருளாட்சி பயவா தென்றுங் கூறுவார் இக் குறளைத் தந்தா ரென்க.

அருளும் அன்பும் ஒருயிரோடு ஒற்றுமைப் பட்டு நிற் குங் குணங்களாயினும், உயிர் வருக்கம் அனைத்தையும் ஒப்ப நோக்குதற்கண் ஒருவனுக்குச் சுரந்த பற்றுள்ளமே அரு ளென்றும், இஃது நிட்காமிய மாதலின் அவனைப் பந்தியா தென்றும், இனி ஒருவன் தனது கட்புல னறிவிற் காயினும் மன வுணர்விற்காயினுஞ் சுட்டி யறியக் கிடப்ப தோர் உயிர் மீதேனும் பல வுயிர் கண் மீதேனும் விருப்புற்று நினைந்தானுயின், அந் நினைந்த மாத்திரை யானே அவற் ருனே விளக்கப்படும் பற்றுள்ளமே அன்பென்றும், இவ் வன்பும் அளவொடு படுவதும் அளவொடு படாததுமாகிய இருவகைத் தென்றும், இவற்றுள்ளும் அளவொடு படா வன்பு களவாகு மாகலான் காமிய மாகு மென்பது பற்றி உடையானைப் பந்திக்கு மென்றும், அளவொடு படு மன்பே

களவாகா தாகலான் அருளுடைமைக் கேதுவாகி அருளாட்சி பயக்கு மென்றும் ஆகமங்கள் கூறும். இதனை உட்கொண்டு, உலகத்துப் பொருளுடையார் சிலரே யாகுக, அஃதின்றிக் கவலு முயிர்கள் பலவே யாகுக, தவஞ் செய்வானுவான் அச் சிலருட் டன்மாட்டுப் பட்டாரை மயக்கி அவர் பொருளைக் கொண்டு, அப் பலவாகிய உயிர்களுக்கு உதவி நின்றானாயின், அஃது களவொடு படுதலின் அளவாகா வன்பாதல் பற்றி அளவாகு மன்பினுலன்றிப் பெறமுடியாத அருளுடைமையை அவனுக்குக் கொடாதென்று கூறியவா றுயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'அருளினது உயர்ச்சியை யறிந்து அதன் மேல் அன்புடையராய் ஒழுகுதல் பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார் மாட்டு உண்டாகாது' என்னும் உரையைத் தந்தா ரெனின், அவர் மேலைக் குறளுக்கும் இக் குறளுக்கு முள்ள பொருளியைபை நோக்கினுரல்லர் என்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின் : தவஞ் செய்வானுவான் தன் தவஞ் செய்தற்குத் துணைபுரிவதாயும் உயிர்கண் மாட்டுக் களவாகா அன்பு செய்தே பெறற்பாலதாயுமுள்ள அருளுடைமைச் செல்வத்தை யாள வேண்டின், பிறன் பொருளைக் கள்ளுதல் செய்யற்க. எ-து.

(தொடரும்)

திரு. R. வேணுகோபாலர் மறைவு.

சங்கத்தின் நற்றுயும் நற்றவமும் ஆய இராதாகிருட்டினனுர் அருந்தவச் செல்வர், தந்தையே யனைய கூரிய அறிவு, வீரம், தமிழ்ப் பணி முதலாய சிறப்புக்களை யுடையர், வேணுகோபாலர், தமது இளைய வயதில், நம் சங்க உறுப்பினராகிய, தம் இல்லறச் செல்வியை விடுத்து மேலுலகம் நண்ணியது குறித்துச் சங்கம் மிக மிக வருந்துகின்றது. சங்கத்தின் சார்பின தாகிய கூட்டுறவுப் பதிப்பகத்தின் தொண்டினை ஏற்றுத் திறம்பெற உரிமை காட்டிப் பணி செய்திருந்த காட்சியைக் கண்ட தமிழன்பர்கட்கு அவர் தந்தையும் பெரிய தந்தையும் உருக்கொண்டு தொண்டு செய்து வருவது போன்ற தோற்றம் மேவிமிக்க மகிழ்ச்சி தந்துதவி வந்தது. அந்தோ! இவரது மறைவு சங்கத்திற்கு எய்திய பெருந் துயர நிகழ்ச்சியாகும்.

பரத சாத்திரம்.

பாவ வியல்

(முற்றொடர்ச்சி துணர் உச—மலர் அ, கூ பக்கம் 250)

ங-ஆவது. தாடனக்கை[1]

தாடனக் கையினைத் தானறி விக்கின்
நீடிய தக்கிணக் கரம்[2] பிறையாகவும்
இடக்கரம் பதாகை யாவெழின் மார்பிற்
படாவகை யெண்விரற் பண்பென வுயர்த்தல்
காட்டிக் கரவகை கேட்டிடி னுரைப்பேன்
இன்ப முறுஞ்சண் டேச்சுர சேவையில்[3]
அன்பு மிகுந்த அனுஷ்டா னத்திலும்
வருமெனக் குறுமுனி வகுத்தன ரன்றே.

(இ-ள்.) தாடன மென்பது, வலக்கை பிறைக்கை யாகவும், இடக்கை பதாகையாகவும், மார்பிற்கு நேரே எட்டு விர லுயர்த்திப் பிடித்தலாம். இதன் றொழில்—சண்டேச்சுரரை வணங்கல்,[1] அனுஷ்டானஞ் செய்தல்[2] முதலியவாம்—எ-று. (ருഠ)

ச-ஆவது. பதாகைக்கை.

பதாகை யஞ்சலி யென்னப் பகர்வர்.

(இ-ள்.) பதாகையென்பது மேற்கூறிய அஞ்சலியே யாம்—எ-று. (ருக)

---

1. தாடனம்—தட்டுதல்; இன்ப விளையாட்டினுள் ஒன்று.

2. வலக்கை. 3. திருக்கோயில் வழிபாட்டின் முடிவில் சண்டேச்சுர நாயனர் திருமுன் வந்து இரண்டுகளையும் மெல்லத் தட்டி வழிபடுதல் சிவாலய வழிபாட்டு விதி முறை யாகும்.

ரு-ஆவது சங்கற்பக் கை[1]

சங்கற்பக் கையே சர்ப்ப சிரமா
அங்கை யிடக்கைமே லாக வலக்கையைக்
குறுக்காக வைத்தலிக் காத்தொழில் கூறிடின்
சங்கற்பஞ் செய்த லாமெனச் சாற்றுவர்.

(இ-ள்.) சங்கற்பமென்பது சர்ப்பசிரக்கை யிரண்டினையும், இடக்கையின் மேல் வலக்கையைக் குறுக்கே வைத்தலாம். இதன் தொழில் சகல கிரியைகளுக்குஞ் சங்கற்பஞ் செய்தலாம்—எ-று. (ருஉ)

ருஈ-ஆவது. டோளக்கை[2]

டோள மிருகையுந் தோளுக்கு நேரே
நீளமாப் பதாகைக் கையினை நீட்டல்
நண்ணு மிதன்றொழில் நலமுட னுரைக்கில்
தண்ணீர் நீந்தல் தான்சுழன் றாடல்
திருந்து கம்பத்தி லேறிச் சிறந்த
பருந்து கருடன் பறந்திடல் காட்டல்
என்று மலயத் திருந்தவ னுரைத்தனன்.

(இ-ள்.) டோளமென்பது, பதாகை விதிப்படி இருகைகளையும் நீட்டுதலாம். இதன்றொழில்—தண்ணீரில் நீந்தல், சுற்றியாடல், கழைக் கூத்தர் கம்பத்திலேறிப் பருந்து, கருடன் பறப்பதைக் காட்டல் முதலியவாம். எ-று. (ருஈ)

---

1. வைதிகச் சடங்கின் தொடக்கத்தில் அதனைச் செய்து முடிக்க வேண்டுமென்னும் உறுதியுடன் இரு கைகளையும் மூடியிருத்தல்.

2. பறவை தன் சிறகுகளைச் சமப்படுத்துவது போல் இரு கைகளையும் இருபுறத்தும் விரித்துக் காட்டும் கை என்பர். அடியார்க்கு நல்லார் காட்டிய தோரம் என்னும் கை இதனோடு ஒப்பக் கருதற் குரியது. தோரமாவது இரண்டு கையும் பதாகை

எ-ஆவது. உற்சங்கக் கை[1]

உற்சங்கந் தன்னை யுரைக்கிற் குடங்கை
வச்ச விரண்டும் வளமுடன் கொண்டிடல்
மிளிரு மிக்கா மேன்செய லுரைக்கின்
குளிர்வாடை பனிமழைக் கொத்த கதுப்பில்
நலமுடன் வைத்தல் நங்கையைத் தழுவுதல்
ஆமெனக் குறுமுனி யறைந்தனர் மாதோ.

(இ-ள்.) உற்சங்கமென்பது குடங்கை யிரண்டுங் கொண்டு, குளிர், வாடை, பனி, மழைகளுக்கு ஒடுங்கிக் கன்னத்தில் வைத்தல், பெண்களைத் தழுவல் முதலிய வாம். எ-று. (ருச)

அ-ஆவது. உபசாரக் கை[2]

உபசாரக் கையை யுரைக்குதுங் கேள்நீ
குடங்கை யிரண்டுங் கூப்பிமார் பிருத்துதல்
இதன்றொழில் தன்னை யியல்புட னுரைக்கில்
பெரியோர் சொல்லைப் பேணிக் கேட்டல்

யாக்கி அகம் புறம் ஒன்றி முன் தாழ்ந்து நிற்பது. 'தோர மென்பது துணியுங்காலை, இருகையும் பதாகையா அகம்புறம் ஒன்ற, மருவி முன் தாழும் வழக்கிற் றென்ப' என்பது இதன் இலக்கணம்.

1. உற்சங்கமாவது—ஒரு கை பிறைக்கையாகக்கொண்டு ஒரு கை அராளமாக்கி இரண்டு கையும் மணிக் கட்டில் ஏற்றி வைப்பது. 'உற்சங்க மென்ப துணருங்காலை, யொருகை பிறைக்கை யொருகை யாராளந், தெரிய மணிக்கட்டி லேற்றி வைப்பதுவே' என்பது அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

2. தன்பால் வருவோரை உபசரிக்கும் குறிப்பினை யுணர்த் துதற்கடையாள மாதலின் உபசாரக் கை என்னும் பெயர்த்தா யிற்று.

மரியாதை யோடு மாறுத்தாஞ் சொலல்
ஒன்றை யேந்தி யொழுக்கமா நிற்ப
தென்றே யருண்முனி யியம்பினர் மாதோ.

(இ-ள்.) உபசாரக்கை யென்பது, குடங்கை யிரண்டனையும் கூட்டி மார்பி லிருத்தலாம். இதன்றொழில்-பெரியோர் சொல்லை விரும்பிக் கேட்டல், மரியாதையாக மாறுத்தரஞ் சொல்லல், உயர்ந்த பொருளை யொழுக்கமாகத் தாங்குதல் முதலியவாம். எ-று. (நரு)

கூ-ஆவது. அபய வரதக்கை[1]

அபய வரதக் கையினை யறையின்
உபய பதாகையி னுயர்வலக் கையின்
அங்கைமுன் காண அடைவுடன் காட்டித்
தங்கிடக் கையைக்கீ ழாக்கிச் சாய்த்திடல்
இதன்றொழி லுரைக்கி னேத்துநின் றோர்க்கே
விதமுடன் வேண்டு மேல்வர மளித்தலும்
அஞ்சாதே யென்றே யபயங் கொடுத்தலும்
செஞ்சொன் முனியா மென்னத் தெரித்தனர்.

(இ-ள்.) அபய வரத மென்பது, இரு கையையும் பதாகை விதிப்படி வலது கரத்தின் விரல் நுனியை உயர்த்தி உள்ளங்கை தெரியக்காட்டி, இடக் கரத்தின் விரல் நுனியினைக் கீழ் நோக்கத் தாழ்த்தி யகங்கை காட்டலாம். இதன் றொழில், வலக்கரம் அஞ்சாதே யென்னலும், இடக்கரம் வேண்டும் வரம் கொடுத்தலுமாம்.—எ-று. (நசு)

---

1. அபயம்—அஞ்சாதே என்றல். வரதம் — கேட்கும் பொருள்களைத் தருங் குறிப்பு. இரு நிலைமையையும் விளக்குங் கை அபய வரதக்கை எனப்பட்டது.

அபய வத்தம் என்னும் பெயருடன் அடியார்க்கு நல்லார் காட்டும் கை இதனுடன் ஒப்பு நோக்கத்தக்கது. இரு கையும் சுக துண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது அபய வத்தம் என்பர். 'அபய வத்தம்மே யறிவுறக் கிளப்பின், வஞ்சமில் சுக துண்ட மிருகையு மாட்சியி, னெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பதுவே' என்பது இதன் இலக்கணம்.

௰-ஆவது. மகரக்கை[1]

மகரக் கையே வான்பிறைக் கையாம்
இகலறு மிக்கரத் தொழிலுரைத் திடினே
பன்றிநாய் மேடம் பாய்தலைக் காட்டிடல்
என்றே பொதியத் திருந்தவ னுரைத்தனன்.

(இ-ள்.) மகரக்கை யென்பது, முற் கூறிய பிறைக் கையாம். இதன் றொழில்—பன்றி, நாய், ஆட்டுக் கடாய் பாய்ச்சலைக் காட்டலாம்—எ-று. (ருஎ)

௧௧-ஆவது. கருடக்கை.

கருடக் கையினைக் கழறுங் காலை
பதாகை தன்னைப் பகர்ந்த கதுப்பில்
விதானமா மாற்றி நேரே புடைத்தே
கருடன் றன்னைக் கண்டுகை தொழுகத்
[2]தெருடரு தமிழ்முனி செப்பினர் மாதோ.

(இ-ள்.) கருடக்கை யென்பது, முற் கூறிய பதாகை யாம். இதன் றொழில்—கன்னத்தில் மாறிப் புடைத்துக் கருடனை வணங்கலாம்—எ-று. (ருஅ)

௧௨-ஆவது. பாரதிக்கை[3]

வலக்கை சிலீமுகம் இடக்கையே வனச
இலக்க தாக எடுத்துக் காட்டிடல்
தக்க விக்கரஞ் சாற்றுதல் காட்டிடில்
தொக்கவெண் டாமரைச் சோதிசேர் பீடம்

---

1. கபோதம் இரண்டு கையும் அகம் புறம் ஒன்ற வைப்பது மகரம் என்பர். 'மகர மென்பது வாய்மையினுரைப்பிற், கபோத மிரண்டு கையு மகம் புறம், ஒன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்' என்பது அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

2. தெருள் தருதமிழ்—தெளிவினைத்தரும் தமிழ்மொழி.

3. பாரதி—சரசுவதி.

தனிலுறை பாரதி தன்கரங் காட்டல்
எனத்தமிழ் வரைமுனி யியம்பினர் மாதோ.

(இ-ள்.) பாரதிக்கர மென்பது, வலக்கை முற் கூறிய சிலீமுகமாகவும், இடக்கை பற்ம கோசமாகவும் பிடித்தல். இதன் ஜெழில்—சரசுவதியின் கரச் செய்கையைக் காட்டலாம்—எ-று. (நிகூ)

கசு-ஆவது. கலகக்கை,

கலகக் கையே பற்மகோ சம்மெனல்
வலமிகு மிக்கரச் செயலறி விக்கின்
இலகிய மோசச் செயலுரைத் திடுதல்
நன்றுநன் றென்றே நகைபுரிந் திடுதல்
என்றே சந்த வரைக்கிறை யிசைத்தார்

(இ-ள்.) கலகக்கை யென்பது முற் கூறிய பற்ம கோசக்கையாம்.[1] இதன் ஜெழில்—மோசச் செயல் கூறல், நன்று நன்றெனப் பரியாசஞ் செய்தலாம்—எ-று. (கூ0)

கசுஎ-ஆவது. சுப சோபனக்கை[2]

சுப சோ பனக்கை சொல்லுங் காலை
சுபமிகு வலக்கையின் பெருவிர லொழிய
மற்றைய விரல்களால் வாம கரத்தின்
உற்ற பெருவிரல் தன்னைப் பிடித்தே
வாமநால் விரல்நுனி வலக்கர நுனியொடு
தாமுறப் பொருந்தச் சார்த்திட லாகும்
இக்கரத் தியல்பினை யியம்பிடிற் சங்கம்

---

1. பற்ம கோசம்—தாமரை மொட்டு.
2. சுப சோபனம்—நற் செய்தி கூறுதல்.

தொக்க சோகைக் கிணைகாட் டிடுதல்
சிவபெரு மானுக் கபிடேகஞ் செய்தல்
நவமார் நந்தியா வர்த்தமு கைக்காம்
வசந்தக் காலுறு வரையிறை வகுத்தனர்.

(இ-ள்.) சுப சோபனக்கை யென்பது—வலக்கையின் பெரு விரல் நீங்கிய மற்ற விரல் நான்கினுலும் இடதுகைப் பெரு விரலைப் பிடித்து, மற்றைய விரல்களின் நுனிகளைக் கூட்டிப்பிடித்தலாம். இதன் ருெழில்-சங்கு, பலகறை, நந்தியா வர்த்தத் தரும்புகளுக் குவமை கூறுதலாம்—எ-று. (சுக)

கரு-ஆவது. பற்ம முகிழ்க்கை[1]

பதும முகிழ்க்கை பகரிரு கரமும்
இதமுட னெருக்கி யெடுத்துக் காட்டல்
கோகர் ணத்தின் சிவக்குறி கூறுதல்
வாகாய் மணத்தில் வாரி யரிசியை
ஓகையாய்ச் சேஷை யுகந்தே யிடுதல்
தென்மலைக் கிறைமுனி செப்பினர் மாதோ

(இ-ள்.) பதும முகிழ்க்கை யென்பது, இரண்டு கைகளைக் கூப்பிக்காட்டல். இதன் தொழில்-கோகர்ண ஸ்தலத்தின் சிவலிங்கங் காட்டல், விவாகத்தில் அரிசியை வாரிச் சேஷையிடல் முதலியவாம்—எ-று. (சுஉ)

---

1. பற்ம முகிழ்—தாமரை யரும்பு. அடியார்க்கு நல்லார் பதுமாஞ்சலி எனக் குறித்ததே இப் பதுமமுகிழ்க்கை யாகும். இரு கையும் தாமரை முகைபோல ஒன்ருகக் கூட்டிக் குவிந்து நிற்கும் நிலை பதுமாஞ்சலியாம். 'பதுமாஞ்சலியே பதும கோசிக, மென விரு கையு மியைந்து நிற்பதுவே' என்பது அடியார்க்கு நல்லார் மேற்கோள். பதும கோசிக மெனினும் பதும முகிழெனினும் பொருளொன்றே.

கசா-ஆவது. மல்ல யுத்தக் கை[1]

மல்ல யுத்தமே வாகுறு முஷ்டியாம்
சொல்லு மிக்காத் தொழிலினைக் கூறின்
மல்ல யுத்தம் வாகுடன் புரிதல்
மல்லல்சேர் வரைமுனி வகுத்தனர் மாதோ.

(இ-ள்.) மல்ல யுத்தக்கை முன் கூறிய முஷ்டிக் கையாம். இதன் தொழில்—மல்ல யுத்தஞ் செய்தலாம் எ—று. (சா௩)

கள-ஆவது. பதாகை சோத்திகம்[2]

பதாகை சோத்திகம் பதாகைக் கையே.

(இ-ள்.) பதாகை சோத்திக மென்பது முற் கூறிய பதாகையே யாம்—எ—று. (சா௪)

கஅ-ஆவது. கத்திரி சோத்திகம்.

கத்திரி சோத்திகம் முன்னத மென்பதாம்.

(இ-ள்.) கத்திரி சோத்திகம் முற் கூறிய முன்ன தமே யாம்—எ—று. (சா௫)

---

1. அடியார்க்கு நல்லார் நிடதம் எனக் காட்டியதே இம் மல்ல யுத்தக் கையாகும். முட்டியாக இரண்டு கையும் சமம் செய்வது நிடதக் கையாகும். 'நிடத மென்பது நெறிப்படக் கிளப்பின், முட்டி யிரண்டு கையுஞ் சமமாகக் கட்டி நிற்குங் காட்சித் ததுவே'—அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

2. அடியார்க்கு நல்லார் காட்டிய சுவத்திகம் என்பதனோடு சொல்லும் பொருளும் ஒத்துக் காணப்படுகிறது. மணிக்கட்டிற் பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக்கட்டி லேற்றி வைப்பது சுவத்திகம் என்பர். 'சுவத்திக மென்பது சொல்லுங் காலை, மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையும், மணிக்கட் டேற்றி வைப்பதாகும்' அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

இரட்டைக் கையில் ஆண்கை.

அஞ்சலி டோளம் அபய வரதம்
விஞ்சு பாரதி விளம்புசங் கற்பம்
தாடனங் கருடக் கையெனச் சாற்றும்
பீடுறு மேழும் பேசிடி லாணும்.

(இ-ள்.) அஞ்சலி, டோளம், அபயவரதம், பாரதி, சங்கற்பம், தாடனம், கருடக்கை, ஆகிய வேழும் ஆண்கையாம்—எ-று. (௬௬)

இரட்டைக் கையிற் பெண்கை.

பதாகை சோத்திகம் பதும முகிழுடன்
விதமுறு பதாகை மேவுமுற் சங்கம்
மகரக் கையே வருசுப சோபனம்
புட்பாஞ் சலியொடு புகன்றவிவ் வேழும்
நட்புறு பெண்ணென நாட்டினர் புலவர்.

(இ-ள்.) பதாகை, சோத்திகம், பதுமமுகிழ், பதாகை, உற்சங்கம், மகரக்கை, சுபசோபனம், புஷ்பாஞ்சலி யென்னும் ஏழும் பெண்கையாம்—எ-று. (௬௭)

இரட்டைக் கையில் அலிக்கை.

மல்ல யுத்தம் வருமுப சாரம்
சொல்லுங் கத்திரி சோத்திக முடனே
கலக நான்குங் கழறிடு மலியே.

(இ-ள்.) மல்ல யுத்தம், உபசாரம், கத்திரி சோத்திகம், கலகம் என்னும் நான்கும் அலிக்கையாம்—எ-று.

இரட்டைக்கை முற்றிற்று.

காலக்ஷணம்

முற்றுப்பெற்றது.

உ-ஆவது. சிர லக்ஷணம்[1]

சீர்கொண்ட வடமொழி யிற்றெரித் திட்ட
பார்புகழ் மூல பாதத்தில் வருசிரம்
சமசிரங் கம்பித மாகம் பிதமே
அமைதுதம் விதூத மடுத்த வுக்கிதம்
நிகுஞ்சித மதோமுக நிலைக்கந் தானனம்
அகமுறு மனுக்கு சிரமீ ரைந்தாம்.

சிரவகையைத் தொகுத் துணர்த்துகின்றது.

(இ-ள்.) வடமொழிப்பரதத்துட் கூறிய சிர வகை-சமசிரம், கம்பித சிரம், ஆகம்பித சிரம், துத சிரம், விதூத சிரம், உக்கித சிரம், நிகுஞ்சித சிரம், அதோமுக சிரம், கந்தானன சிரம், அனுக்கு சிரம் என்னும் பத்தாம்-எ-று.

(சாகூ)

க-ஆவது. சம சிரம்.

சமசிர நேரே சாயாது நிற்றல்
அமைவுறு மிதன்குறி தமையறி விக்கின்
முந்து நாட்டிய முயன்றிடும் போது
சிந்தையின் மிக்க செறிவித னத்தும்
சித்திர வுருவமுந் தேவர்க ணிலையும்
பத்தியாச் செபதபம் பலதியா னத்தும்
மிஞ்சிய சுமைதலை மேலே வைத்தல்
அஞ்சன மிட்டே யதிசயம் பார்த்தல்
திலதந் திருமண் திறமுடன் தீட்டல்
மலைவறு தம்பந் தம்பனங் காட்டல்
சந்ததஞ் சவுட்டற்[2] றொழிற்கா மென்றே
செந்தமிழ் முனிவர் செப்பினர் மாதோ.

சிரலக்ஷணத்தை விரித் துரைக்கின்றது.

(இ-ள்.) சமசிர மென்பது நேரே நிற்றலாம். இதன் றொழில்—நாட்டிய மாடும்போது வியசன முறுதலும்,

---

1. அபிநய வகையுள் தலையின் இயல்பு கூறும் பகுதி.
2. சவுட்டல்—சவட்டல் (மிதித்தல்)

சித்திர வுருவம், தேவர்கள் நிலை காட்டலும், ஜெபம், தபம், தியானஞ் செய்தலும், பாரஞ் சுமத்தலும், அஞ்சனம் பார்த்தலும், திலதம், திருநாம மிடுதலும், தூண், ஸ்தம்பன நிலை காட்டலும், மிதித்தலும் முதலியவாம் எ-று. (எ௰)

உ-ஆவது. கம்பித சிரம்[1]

கம்பிதர் தன்னைக் கழறுங் காலை
இன்புறு சிரசை யிடம்வல மசைத்தல்
இந்த விதத்து ளியலபி நயவகை
அந்தமாய்ப் பிறர்தொழில் தனைவியந் திடுதல்
உறுபிணிக் கிலேசத்[2] துயர்நேர்ந் திடுதல்
தாம்வாசல் சாளரம்[3] தனிலுற்றுப் பார்த்தல்
ஆமென் பதற்கும் அல்லவென் பதற்கும்
ஆமெனக் குறுமுனி யறைந்தனர் மாதோ.

(இ-ள்.) கம்பித சிரமென்பது—சிரசை இடம் வலமாக அசைத்தலாம். இதன் தொழில்—பிறர் செய்த தொழிலைப் புகழ்தல், நோயுற்றதையும் கிலேச முற்றதையுங் காட்டல், வாசலையும் பலகணியையும் உற்றுப் பார்த்தல், ஆமெனல், அல்ல வெனல் முதலியவாம்-எ-று. (எக)

ந-ஆவது. ஆகம்பித சிரம்[4]

ஆகம் பிதசிரம் ஆகாயம் பூமியை
வாகாய்ப் பார்த்தல் வகைத்தொழில் வருமிடம்
வாரு மிருமெனல் வணங்கி யுரைத்தல்
சீருப் பொருமை தன்னைச் செப்பிடல்
மோகக் கண்ணுடி முகம்பெறப் பார்த்தல்
வாகுகை ரேகை மன்னுறப் பார்த்தல்
என்றே பொருநைக் கிறைவ னுரைத்தனன்.[5]

(இ-ள்.) ஆகம்பித சிர மென்பது—ஆகாயம் பூமியைப் பார்த்தலாம். இதன் தொழில்—வாரு மெனல்,

---

1. கம்பிதம்—நடுங்குதல்.
2. உறுபிணி—மிகுந்த நோய். கிலேசம்—மனக்கலக்கம்.
3. சாளரம்—சன்னல்.
4. ஆகம்பித சிரம்—மேல் கீழாகத் தலையாட்டுதல்.
5. பொருநை—தாம்பிரபர்ணியாறு. இறைவன்—அகத்தியன்.

இரு மெனல், உபசாரஞ் செய்தல், பொருமையைக் காட்டல், கண்ணுடி பார்த்தல், கை ரேகை பார்த்தல் முதலியவாம்—எ-று. (எ௨)

ச—ஆவது. துத சிரம்[1]

துதசிரஞ் சிரசினைச் சுற்றுதல் வட்டமாய்
இதன்ரெழில் வருமிடம் இயம்பிடக் கேண்மோ
சன்னதம் பேய்கள் தலைசுற்றி யாடல்
முன்னமே யசைந்திடு முகவாத ஜன்னியாம்
கோமாளி[3] யங்கக் குறிப்பெனச் சிவத்தின்
நாமம் புகழ்முனி நவின்றன ரிதுவே.

(இ-ள்.) துதசிர மென்பது, சிரசினை வட்டமாய்ச் சுற்றுதலாம். இதன் தொழில்—சன்னத மாடல்[2], பேயாடல், முகவாத ஜன்னி காட்டல், ஆசியக் கூத்தன் குறிப்பைக் காட்டல் முதலியவாம்—எ-று. (எ௩)

ரு—ஆவது. விதூத சிரம்[4]

விதூத சிரமே யொருபுறஞ் சாய்த்தல்
விதான விதன்ரெழில் நேர்மை யுரைக்கின்
வேய்ங்குழ லூதல் வீணை வாசித்தல்
பாங்காய்க் கருடன் பன்னிடு மனுமன்
கனமிகு மகோரத் திருமுகங் காட்டல்
மனமது மகிழ்ந்து வரிசையாய்ப் படுத்தல்
ஒப்பின் றென்றே யுண்மைய தாகச்
செப்பினர் முத்தமிழ்ச் செயலறைந் தோரே.[5]

(இ-ள்.) விதூத சிர மென்பது—சிரசை யொருபுறஞ் சாய்த்தலாம். இதன் தொழில்—புல்லாங்குழ

---

1. துதம்—அசைவு. 2. தெய்வம் ஆவேசிக்கப் பெற்று ஆடுதல். 3. விகடக் கூத்தாடுபவன்.

4. விதூதம்—தள்ளப்பட்டது என்பது பொருள். வேண்டாமைக் குறிப்பாகத் தலை யசைக்கும் அபிநயம் என்னும் பொருளில் இப் பெயர் வழங்கி யிருத்தல் கூடும்.

5. இயலிசை நாடக மாகிய முத் தமிழின் இயல் புரைத் தோராகிய அகத்திய முனிவர்.

லூதல், வீணை வாசித்தல், கருடன், அனுமானுடைய கோப முகங் காட்டல், படுத்தல் முதலியவாம்—எ-று. (எச)

சு-ஆவது. உக்கித சிரம்[1]

உக்கித சிரத்தை யுரைக்குங் காலை
முக்கிய மாக முகட்டினைப் பார்த்தல்
திடமுட னிதன்றொழில் தன்னைச் செப்பிடின்
உடுபதி சூரிய னுயர்மே கங்களின்
வகையறிந் துரைத்த லாமென வறைந்தனர்.

(இ-ள்.) உக்கித சிர மென்பது—உச்சியைப் பார்த்தல். இதன் தொழில்—சந்திரன், சூரியன், மேகங்களைப் பார்த்தல் முதலியவாம்—எ-று. (எரு)

எ-ஆவது. நிகுஞ்சித சிரம்[2]

நிகுஞ்சித மென்பது நிலையாஞ் சிரமதை
தருமிரு தோண்மேல் மாறிச் சார்த்தல்
இதன்றொழில் வருமிட மியம்பக் கேளும்
விதம்பெறு தோண்மிசை சுமைமாறிச் சார்த்தல்
உறுத்திடி னுலுங்கி னுயர்ந்தே சார்தல்
வெறுப்பறு குறுமுனி விரித்தனர் மாதோ.

(இ-ள்.) நிகுஞ்சித சிர மென்பது, சிரசைத் தோண்மேல் மாறிச் சார்த்தல். இதன் தொழில்—தோளின் மேல் சுமையை மாற்றி வைத்தல், திண்டின் மேற் சார்தல் முதலியவாம்—எ-று. (எசு)

அ-ஆவது. அதோமுக சிரம்[3]

அதோமுக மென்னுஞ் சிரவகை யுரைக்கின்
நிதானமாய்க் கவிழ்ந்து நிலத்தினைப் பார்த்தல்
நலத்தகு மிதன்செயல் நாட்டிடக் கேண்மின்
நிலத்துறு பொருளை நெறியுடன் பார்த்தல்
என்றே தென்றற் குறுமுனி யியம்பினர்.

(இ-ள்.) அதோமுக சிர மென்பது, கவிழ்ந்து பார்த்தல். இதன் தொழில்—பூமியி லுள்ள பொருளைப் பார்த்தல் முதலியவாம்—எ-று. (எஎ)

---

1. உக்கித—உக்ஷித—முதிர்ந்த என்னும் பொருளுடையதாகிய இச்சொல் மேல் நோக்கின என்னுங் கருத்தில் ஆளப்பெற்றது. 2. வளைந்து சாய்ந்த தலை.

3. அதோமுகம்—கீழ் நோக்குதல்.

கூ-ஆவது. கந்தானன சிரம்[1]

கந்தா னனசிரங் கருத்துட னுரைக்கில்
முன்றிசை பின்றிசை முகமாறிப் பார்த்தல்
நலமுட னிச்சிரம் நாட்டினில் வழங்கும்
பலகோலங் காட்டிடு பண்பி லிதுவரும்
பிரியாக் கணவனைப் பிரிந்தமின் பார்த்தல்
சிறியர் விளையாட்டிற் சிறந்துதா னோக்குதல்
சிங்கம் புலிகள் திரும்பிப் பார்த்திடல்
சங்கத் துறுமுனி சாற்றின னன்றே.

(இ-ள்.) கந்தானன சிர மென்பது—முன்னும் பின்னும் மாறிப் பார்த்தல். இதன் தொழில்—பெண்கள் பிரிந்த கணவனைப் பார்த்தல், சிறுவர் விளையாட்டில் முன் பின் பார்த்தல், சிங்கம், புலிகள் திரும்பிப் பார்த்தல் முதலியவாம்—எ-று. (எஅ)

ய-ஆவது. அனுக்கு சிரம்[2]

அனுக்கு சிரமே யசைத்திடல் சுருக்கென
நினைத்திடு மிதன்றொழில் நிகழ்ந்திடு காலை
நடுக்கு வாதத்திலும் நால்வகைச் சலுப்பிலும்[3]
கொடுத்திடு மருந்தைக் குடித்திடு போதும்
பாபச் செயலைப் பகர்ந்திடு போதும்
கோபத் தொடுகொடுத் திட்டேனெனக் கூறலும்
ஆமச் சிரத்தி னையிரண் டன்றொழிற்
காமெனத் தென்ற லருந்தவ னுரைத்தனன்.

(இ-ள்.) அனுக்கு சிர மென்பது—படபட வென்று தலை யசைத்தலாம். இதன் தொழில்—நடுக்கு வாதம் காட்டும் போதும், நான்கு விதத் துக்கத்திலும், மருந்து தின்னும் போதும், பாப செயலைக் கேட்டபோதும், கோபக் குறி காட்டும் பொழுதும் ஆம்—எ-று. (எகூ)

சிரலக்ஷண முற்றிற்று.

---

1. கந்தானனம்–முன்னும் பின்னும் மாறி மாறிப் பார்க்கும் முகம்.

2. அனுக்குதல்—வருந்துதல். நடுக்கு வாதத்தால் வருந்தித் தலை நடுங்குவது போன்று அமைந்த அபிநயம் அனுக்கு சிரம் ஆகும்.

3. நால்வகைத் துன்பங்கள். சலிப்பு என்னுஞ் சொல் சேரி வழக்கில் சலுப்பு எனத் திரிந்து நின்றது.

மெய்ப்பொருள் நூலிலும் தமிழ் இலக்கணத்திலும் உள்ள ஒற்றுமைக் கருத்துக்கள்.

Parallel ideas in Indian Philosophy and Tamil Grammar.

திரு. கோ. தியாகராசப் பிள்ளை, G. M. V. C., தஞ்சை.

ஞாலப் பிறப்பு

மூத வாஎன் குணமவை மூன்றினும்
பேத மாகும் பிரகிருதி தன்னிலே
காதலால் வைப்பன் யான்கரு அக்கருப்
பூதம் யாவும் புலப்படு கின்றவே.

—பகவற் கீதை, 14-4.*

மண்ணு நீரும்எரிதீயும் வாயுவும் அவ்வானினொடு மன புந்தியும்
எண்ணு நீர்மைகளில் யானெ னும்பதமும் என்னும் எட்டும்இவை
[யன்றியே
பண்ணு நீர்மைகளின் மேல தாய்உலகில் யாவையுங் கொடுபரித்துடற்
கண்ணு நீடுயிரும் ஆகி என்னுடைய மாயை நிற்பதுகை வேவினேய்.

—பகவற் கீதை, 7-3.

என்பதாகக் கண்ணபிரான் கூறினர். இதற் கேற்ப,

எழுத்தின் பிறப்பு

நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குற் றிதழ்நா பல்அணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

—பவணந்தி. எழுத்து, 73.

எனப் பவணந்தியார் தம் இலக்கணத்தில் கூறினர்.

---

* இக்கட்டுரையில் மேற்கோள்களாகக் காட்டிய பகவற்கீதையில் உள்ள பாக்கள், திரு. பட்டனாருளிச் செய்த 'பரமார்த் தரிசனம்' என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டவை.

மேலே காட்டிய ஞாலப் பிறப்பையும் எழுத் தொலியின் பிறப்பையும் ஒப்பிட்டு நோக்குவாம்.

நிறை உயிரை எங்கும் நிறைந்த பரம்பொருளெனவும், உள்வளியை மாயை அல்லது மூலப்பொருள் (cosmic matter) எனவும், இவை யிரண்டையும் முயற்சி யெனும் வினை துரப்ப எழும் அணுத்திரள் மாயையின் முக்குணங்களை யடைந்து, உர மெனும் மனமாகவும், கண்டமாகிய யான் எனும் அகங்கார தத்துவமாகவும், உச்சி யெனும் புத்தியாகவும் நிலைத்துப், பல் எனும் நிலமாகவும், ஊறல் உள்ளதும், அசைவு கொண்டது மான நா நீராகவும், உதடு அழலாகவும், வளி உலவும் மூக்கு காற்ருகவும், வெளி யாகிய (empty space) அண்ணம் ஆகாய மாகவும் ஒப்புக் காட்டி, அவைகளின் கலப்பால் வெவ்வே றெழுத்தொலிகள் பிறந்தன வென முடிப்பின், ஞாலத்தின் பிறப்பும், எழுத்தொலிகளின் பிறப்பும் ஒவ்வும்.

மன்னவுடல் யாவையினு மன்னியறி வாய்நின்
றுன்னும்உயிர் யான். —பகவற் கீதை, 13-3.

என்று கோபாலன் கூறியதற் கேற்ப, தன்னியக்க மற்ற மெய்களுக்குத் துணையாய் நின்று அவைகளை இயக்கும் எழுத்துக்களை உயிர் அல்லது ஆவி யெனவும், அவ் வுயிருக்கு இடம் தரும் எழுத்துக்களை உடல் அல்லது மெய் எனவும் பெயரிட்டதும் ஒப்பானவே.

மும்மலம்.

வல்லினம் ஆணவ மலமும், மெல்லினம் காமிய மலமும், இடையினம் மாயா மலமும் ஏற்றவை யென்பதற்கு எடுத்துக் காட்டாகப் பல பாக்களைக் கம்பராமாயணத்திலிருந்து எடுத் துத் திரு. மாணிக்க நாயக்கர், The Tamil Alphabets-Its Mystic Aspect என்னும் தலைப்புள்ள நூலில் கையாண் டிருக்கிருர்.

முதல் படைப்பு (primary creations) என்று காட்ட 'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே' எனவும், வழிப் படைப்பு (secondary creations) என்று காட்ட உயிர் மெய் எழுத்துக்களையும், ஆயுதம், அளபெடை, குறுக்கம், இவற்றையும், சார்பெழுத்து (secondary creations) எனவும் பெயரிட்டனர்.

மேற் கூறியவாறு தமிழ் எழுத்துக்கள் உண்மை நூல்களின் கூற்றுக்கு ஏற்ருற்போல் பிறப்பு முதலியன ஏற்றதுமன்றித், தற்காலக் கலைகளுக் கேற்க (Scientific) உயிரைச் சக்தி (energy) எனவும், மெய்யை மூலகம் (elements) எனவும், உயிர்மெய்யைக் கூட்டுப் பொரு (compounds) ளெனவும், ஒப்பிடின் பொருந்தும்.

சக்தி (energy), மூலகம் (elements), உயிர் மெய் (compounds) இவைகள் புணர்ந்தும், பிரிந்தும் வெவ்வேறு பொருள்களாக நிலவுவதைக் கலைகள் எடுத்துக் கூறுகின்றன. இது போலவே, நம் இலக்கணத்தாரும் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்கள் புணர்ந்தும், பிரிந்தும் வெவ்வேறு பொருள்களைக் குறிக்கும் சொற்களாவதை நன்கு விளக்குகின்றனர்.

'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' என்னும் விதியால், உயிரைக் காட்டுவது மெய்யே எனவும், உயிர் அழியாது, திரியாது என்பதைக் காட்ட 'உயிர்விட் டோடும்,' 'உயிர் நீங்கும்' எனவும், உயிர் தோன்ருது, மெய்தான் தோன்று மென்பதைக் காட்ட, 'மெய் தோன்றும்' எனவும், உயிர் நீங்கியபின் உடல் கெட்டுப்போகு மென்பதைக் காட்ட, 'மெய் கெடும்' எனவும், உயிர் நீங்கியபின் உடல் தன்னிலையடையும் (Dust thou art; unto dust thou returnest) என்பதைக் காட்ட, 'மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்' எனவும், மெய்யறிவு நூல்களில் கூறியது போலவே நம் இலக்கண விதிகளும் கூறுகின்றன.

பல இடங்களில் 'சிவணும்' என்னும் சொல் நம் இலக்கணத்தில் காணப்படுகின்றது. இந்தச் சொல்லிற்கு இயற்கைப் பொருத்தத்தால் சேர்தல் (combination due to natural affinity) எனப் பொருள் கொள்ளின் சிறக்கும்.

மேலே காட்டிய உண்மைகளையே

ஊறுபட வொன்றினுளே பிறத்தல்,பிறந் துளவாதல்,
வேறுபட வளர்தல்,வளர்ந் தயலொன்ருய் விளைந்தமைதன்,
மாறுபடத் தேய்த,லற மாய்த,லென வருகின்ற
வாறியல்பு முடம்பன்றி அறிவடையா வாதலினுல்
—பகவற் கீதை, 2–23.

என்பதாகக் கண்ணனும் கூறியுள்ளார்.

புணர்ச்சி.

உலக இயற்கையைத் தழுவியே, நம் மொழியிலுள்ள புணர்ச்சிகளை, 'இயற்கைப் புணர்ச்சி' எனவும், 'விகாரப் புணர்ச்சி' எனவும் வகுத்தனர். இது எவ்வாறெனின், இயற்கையிலேயே இருவாயுக்கள் புணர்ந்து (CO_2) கரியமில வாயு வெனவும், (H_2O) · நீரெனவும் நிலவுவன இயல்புப் புணர்ச்சி. சுதக்கரிகை (Calcium carbonate) அல்லது சீமைச் சுண்ணும்பும் நீர்ப்பாசிக்காடியும் (Hydro chloric acid) புணரும் பொழுது கீழ்க்கண்ட விகாரங்கள் நிலவும்:

$$CaCO_3 + 2HCl = H_2O + CO_2 + CaCl_2$$

அதாவது, நீர், கரியமிலவாயு, சுதபாசிதை (Calcium chloride) என்பவாகத் தோன்றலும், திரிதலும், கெடுதலும் உண்டாகும். இதுபோலவே, விகாரப் புணர்ச்சியில் தோன்றலும், திரிதலும், கெடுதலும் உண்டு.

ஞாலத்தி லுள்ள பொருள்கள் யாவும், சக்தி (energy), மூலகம் (element), மூலக்கூட்டு (coumpound) இவைகள் தனித்தும் புணர்ந்தும் ஆயினவே. இது போலவே, நம் மொழியின் எழுத்துக்கள் தனித்தும் புணர்ந்தும் சொற்க ளாகிப் பொருள் குறிப்பனவே.

எனவே, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என இலக்கண விதி கூறுகின்றது. ஞாலத்தி லுள்ள பொருள்கள் பெயர், வடிவால் வேற்றுமைப் பட்டன வென மெய்ந் நூலார் கூறுவர். அஃதேபோல், வேற்றுமையைப் 'பெயர் வேற்றுமை' எனவும், வடிவு வேற்றுமையை, 'உருபு வேற்றுமை' யெனவும் நம் இலக்கணம் நுவலுகின்றது.

இவ் வேற்றுமையும் மயங்கு மெனக் காட்ட வேற்றுமை மயங்கியலை இலக்கணம் கூறுகின்றது. இது இயற்கையில் எவ்வாறெனின், நீரி லுள்ள நெகிழ்ச்சித் தன்மையே, நீர் மின்சக்தி (Hydro Electric Energy) எனவும், மின்காந்த சக்தி (Electro magnet) எனவும் நிலவுவன. இதுவே 'உயிர் (Energy) மயங்கியலை' யொக்கும்.

ஒரு பொருளே நீராகவும், பனிக்கட்டியாகவும், நீராவியாகவும் நிலவுவதை நாம் அறிவோம். இதுவே 'மெய்ம்மயக்கியலை' யொக்கும்.

உயிர் மயக்கியலைப் பசு மாயை (Illusion of the soul) எனவும், மெய்ம் மயக்கியலைப் பாச மாயை (Illusion of the body) எனவும் திரு. மாணிக்க நாயக்கர் கூறியுள்ளார்.

சொல்

உலகப் பொருள்களுக்கு அமைப்பும், குறியும் உளதே போலச், சொற்களுக்கும் உண்டென்பதைப் 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும், சொல்லி னாகு மென்மனார் புலவர்' என இலக்கணம் கூறுகின்றது.

உலகத்தில் பருப்பொருளும் (concrete), கருத்துப் பொருளும் (abstract) உள்ளன போலச், சொற்களிலும் உள்ளன என்பதைக் காட்டத், 'தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு, மிருபாற் றென்ப பொருண்மை நிலையே' என இலக்கணம் வகுத்தது.

பதம்.

Elemental substances singly or in combination become the material cause of the products of the world. (Indian philosophy by Sir S. Radhakrishnan, Vol. II. page 189). அதாவது, மூலங்களே தனித்தும் புணர்ந்தும் இம் மேதினிப் பொருள்களாயின. எனவே, 'எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்' என்றது இலக்கண விதியாம்.

இம் மேதினியில் ஓர்அணு உயிரிகளும் (unicellular organisms) பல்லணு உயிரிகளும் (multi-cellular organisms) நிலவுவபோலச் சொற்களும், பகாப்பதமும், பகுபதமு மாயின.

'The things of this world, material and immaterial, must have being or existence, must function in time and space and should possess attributes or characteristics' ஞாலத்துப் பொருள்கள் யாவும், இருப்பும், கால், இட இயக்கமும், பண்பும்

உடையன. எனவே, நம் மொழியின் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பிரித்தனர்.

'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே' எனவும்,

பொருள்கள் காலம், இடம் (space in time and distance), உரி இன்றி நிலையா வாகையால்,

'இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப'

என்றும் விதித்ததால், சொற்கள் நான் காயின.

பெயர்.

'பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே'

என்பது இலக்கண விதி.

உலகப் பொருள்களை ஆங்கிலேயர் உயிருள்ளவை (animates), உயிரில்லவை (inanimates) எனப் பிரித்தனர். நம் மவரோ, தம் வினைக்குப் பொறுப்புள்ளவற்றை 'உயர்திணை' (rational beings) எனவும், தம் வினைக்குப் பொறுப்பற்றவை களை 'அஃறிணை' (irrational beings) எனவும் பிரித்தனர். (இது வினை இயல் கூறுங்கால் நன்கு விளங்கும்.)

உயர்திணை, அஃறிணை யென்பன பொது நோக்கத்தைக் (சமட்டி) குறிக்கும். எனவே, தனி நோக்கத்தை (வியட்டி) நோக்கிப் பால் கூறினர்.

இவ் வியட்டி நோக்கமில்லையேல் (individualistic conception), ஆண், பெண், பொது, ஒன்று, பல என்னும் பால்கள் (பான்மை) தோன்றா. ஆகையால், இப் பாகுபாடும் மெய் யறிவிற் கொத்ததே.

மேற் குறித்த சமட்டி, வியட்டி நோக்கங்களைத் தன் னிடத்திலும், எதிரிலும், பல்வகையிலும் உணரலா

மாகையால், தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும் மூவிடமும் இலக்கணம் வகுத்தது.

வினை.

'தினையிட்டான் தினையறுப்பான்; வினையிட்டான் வினையறுப்பான்' என்னும் முதுமொழியில் வினைப் பயனை எவ்வாறு வேற்றுமை யின்றி ஏற்ற காலத்தில் நுகருவோமெனத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறதோ, அதே போல,

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்'

என்று இலக்கண விதியும் கூறியது.

என்று கூற விசைய னியம்புவா
னின்று யோகத்தி லேநெடு நாளெல்லாம்
பொன்றுங் காலத் தயர்ந் துயிர் போயினர்
சென்று நற்கதி யேயன்று சேருமோ

யோக மேவ வினைக ளொருவினன்
மோக மேவலின் யோக முடிந்தில
னேக மேயிரு பாலும் விடாஙிற்க
மேக மேயென வீய்ந்து கழியுமோ —பகவற் கீதை, 6-27, 28.

என்று விசையன் தன் ஐயுறவைக் கண்ணபிரானிடம் தெரிவிக்கக், கண்ணபிரான்,

யோக முடியா திடையே யிறந்தவன்
யாக வினைபல செய்தாங் கிசைந்திடுஞ்
சோகமி ஞடைய்தித் துன்பந் தொடாதே
போக நுகர்ந்துபல் காலங்கள் போயபின்

சிறந்த வாசர் திருக்குலத் தாத
லறந்தரு யோகிக டங்குலத் தாதல்
பிறந்து பெறுவதெல் லாமெய்திப் பின்னு
மறந்த வியோக மகிழ்வுட னெய்தும் —பகவற் கீதை, 6-31, 32.

என்று கூறினர். ஆகையால், முன் இயற்றிய வினை அழி

யாது, அவ் வினைக் கேற்ற இடமும், காலமும், மற்றும் பெற்று, அவ் வினை முடிவை எய்து மென்று கூறியதற் கொப்ப,

'குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினை.' எனவும்,

'செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறும் தருவது வினையே.'

எனவும் இலக்கணத்தார் விதித்ததும் தத்துவக் கொள்கையே. இன்னும்,

'அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.'

என்று இலக்கணம் விதித்தது, மெய்யறிவிற்கு எவ்வாறாகுமெனின், முற் கூறிய வினைகள் ஒரு பிறவிக்கே காரண மாகி அப் பிறவியில் முற்றினும், முற்றும்; அல்லது,

மகன்தந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல் —திருக்குறள்

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும் —திருக்குறள்

என்பதற் கேற்ப, நம் எச்ச மாகிய நம் மக்களை நம் வினைகள் தழுவினும், தழுவும்; அல்லது,

கொண்டு பயிலுங் குணமில னாகினு
முண்டு தெளிவென் றுணர்ந்த வியோகந்தான்
பண்டு பயின்ற பயிற்சியி னன்றனைத்
தண்டுத லின்றிமுன் றானே தலைப்படும்

—பகவற் கீதை, 6-33.

என்பதற் கிணங்க நம் வினை எச்சம் மறு பிறவியில் நம் வினைக் கடிப்படையாய் நிற்கும்.

இவ்வாறான மெய்யறிவுக் கொள்கைகளைப் பூண்டதால் வினைச் சொற்களைப் பின் காட்டியபடி இலக்கணத்தார் வகுத்தனரோ?

Grammatical Expressions		Philosophical Expressions
	இலக்கணப் பெயர்கள்	மெய்யறிவுப் பெயர்கள்
1.	இறந்தகால வினை	சஞ்சித கன்மம்
2.	நிகழ்கால வினை	பிராரத்த கன்மம்
3.	எதிர்கால வினை	ஆகாமிய கன்மம்
4.	தன் வினை	ஆதி ஆத்மீக கன்மம்
5.	பிற வினை	ஆதிபௌதீக கன்மம் & ஆதிதெய்வீக கன்மம்
6.	குன்றிய வினை	சஞ்சித கன்மத்தில் நுகர்ந்தது போக இன்னும் நுகரவேண்டிய வினை
7.	குன்றாத வினை	நுகராமல் விடுபட்டதால் இனி முற்றும் நுகரவேண்டிய வினை
8.	முற்று வினை	இப் பிறவியில் இயற்றி இப்பிறவியிலே யே நுகர்ந்து முடிந்த வினை
9.	குறை வினை	இப் பிறவியில் இயற்றி இப் பிறவியில் முற்றும் நுகாராத வினை
10.	தெரிநிலை வினை	இப் பிறவியில் நுகரும் பலாபலனுக்கு ஆதாரம் இன்ன தெனத் தெரிந்த வினை
11.	குறிப்பு வினை	இப் பிறவியில் நுகரும் பலாபலனுக்கு ஆதாரம் இன்ன தெனத் தெரியாமல் குறிப்பாக நிற்கும் வினை.
12.	துணை வினை	இப் பிறவியில் இயற்றும் வினைக்குத் துணையா யிருக்கும் வினை
13.	எதிர்மறை வினை	பின் வரும் வினைப்பயனை மறைக்க இயற்றும் வினை

எவ்வாறெனில்,

புலனவை பொறிவழி போக்கு மாற்றியே
பலனற வினைகள்என் பொருட்டுப் பண்ணுவாய்
நலனுறு மவ்வினை நாச மின்றியே
சலமுறு பிறவியுந் தவிர்க்குந் தன்மைகேள்.

—பகவற் கீதை, 3-5.

பிறவியைத் தவிர்க்கும் வினையே எதிர்மறை வினை. ஏனெனில்,

செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்திட னுடைத்தே வாராக் காலம்

—தொல். சொல். 239.

(மேலே விளக்கியவைகளைத் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் நூலில் காண்க.)

இடை.

Time and Space.

நாம் மேம்போக்காக 'இருக்கை' என்று சொல்வது, வேறுவேறு தன்மைகளால் ஒன்றினொன்று பாகுபடுத்தப் பட்டு, இடத்திலும் பொழுதிலும் பல்வகைய நிலைமையுடைய பொருள்களின் வரிசையே யன்றி வேறன்று.

'What we vaguely call being is nothing more than a series of things variously conditioned in time and space and distinguished from one another by different properties'

(Indian Philosophy by Sir S. Rathakrishnan, Vol. II, p. 187)

இந்த மேற்கோளில் பண்புகள் (properties) என்பன உரி அல்லது attributes எனப் பொருள்படும். எனவே, இந்த 'உரி' என்பதை விடுத்து மற்றத் தன்மை பின் வருமாறு:

இடையெனப் படுப பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே. —தொல். சொல். 249.

என்னும் ஓத்தில் 'பெயரொடும்' என்பதற்கு 'with the things'

என்பதாகப் பொருள்கொண்டு ஆராய்ந்து பார்க்கின், இடை (time and space) பெயரொடும் வினையொடும் தழுவி நிற்குமே யொழியத் தானாய் நின்றியங்கின் பொருள்படாது.

மேலும், இடம் உடனியைதலையும், காலம் தொடர்ந்தியைதலையும் குறிக்கும். பொருள்கள் காலம் பற்றி இயங்குகின்றன; இடம் பற்றி ஒன்றி நிற்கின்றன. இடமும் காலமும், இடம் மாறுதல், தன்மை மாறுதல், நிலைபெயர்ச்சி, கால வேற்றுமை முதலிய மிகப் பலவான தொடர்புகளை உட்படுத்துமெனினும், அவை உளவாம உண்மைப் பொருள்களையே குறிக்கும்.

'Space deals with co-existence, time with succession. Things move by virtue of time and hold together by virtue of space. While space and time cover the most comprehensive kind of relations, transition from place to place, or state to state, spatial locomotion and temporal alterations, they are only formal and imply real things which move and change.'

(Indian Philosophy by Sir S. Radhakrishnan, Vol. II, p. 192)

இக் கூற்றை முன் காட்டிய தொல்காப்பிய விதியுடனும், தொல்காப்பியம், சொல்லதிகாரம், 250 ஆவது விதியாகிய,

'அவைதாம்,
புணரிய நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கு காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு
மசைநிலைக் கிளவி யாகி வருநவு
மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை'

என்ற இவ் வோத்துடனும் ஒப்பமைப்பு நோக்கின், தத்துவக் கருத்துக்களுக்கு இவ் வோத்துக்கள் ஒப்பியிருக்கின்றன வாதல் தோன்றுகிறது.

இன்னும், புலனாகாத பொருள்கள் நிரம்பாதபொழுது இடம் என்பது வெறும் எண்ணமே. புலனறிவிற்குச் சில பொருள்கள் பிற சில புலனும் பொருள்களுக்கு இன்னின்ன நிலையில் அல்லது தூரத்தில் உள வென்பதே இடம் என்பதற்கு ஏறத்தாழ நேரான பொருள். இடங்கொள் பொருள்களையன்றிப் பிறவற்றைப் புலனால் அறிதல் இயலாது.

'Space is an empty concept when not filled with perceived objects. Space nearly means that certain objects are for the perceiving mind at such and such a posi-

tion or distance with reference to other perceived objects; and no external perception is possible except of objects in space.'

(The Story of Philosophy by Will Durant, p. 312.)

'இடையெனப் படுவ தமக் (இயலும்) கியல் பிலவே'

=Space is an empty concept.

புணரிய நிலையிடைப் பொருணிலைக் குதவும் =That certain objects are for the perceiving mind at such and such a position or distance.

இவைபோல மற்ற ஒற்றுமைகளும் பெரும்பாலும் உளவே.

உரி.

Attributes or Characteristics.

'பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்' —பவணந்தி. உரி. 441.

இவ்வாறு பண்பைக் குறிக்கும் சொற்கள் உரிச் சொற்களாம்.

Thus the words denoting attributes or characteristics are உரிச்சொல்.

தனி அல்லது குறிப்பான தன்மைகளும், பரந்த அல்லது பொதுவான தன்மைகளும் உளவாதல் போலவே, இவைகளுமாம். Just as there are special or particular characteristics and general or common characteristics, so these are. ஒரு குணத்திற்கே உரியவாயும், பல குணத்திற்கே உரியவாயும் பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் தழுவிய உரிச்சொற்கள் உள.

மற்றும், 'எழுவாய்' என்பது வினை எழும் இடம் எனவும், 'பயனிலை' என்பது வினைப்பயன் இருக்கும் நிலை அல்லது இடம் எனவும் பொருள்படின், தத்துவப் பொருள் உடையன வென நன்கு விளங்கும்.

காலத்தால் உலகம் இடைவிடாது மாறிக்கொண்டே இருக்கின்றது. (The world is constantly changing in time and so,) ஆதலால்,

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே' —பவணந்தி. 461.

அறிவிலும் ஆற்றலிலும் குன்றிய யான், என் அறிவிற்

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

மனத்தை விளிப்ப தேன்?

புலவர்கள் பெரும்பாலும் ஆடவரையோ, பெண்டிரையோ விளித்துப் பொருளைக் கூறுவதுபோல் செய்யுள் இயற்றியிருத்தலை யாவரும் அறிவர். ஆணை விளித்தால் ஆடூஉ முன்னிலை என்றும், பெண்ணை விளித்தால் மகடூஉ முன்னிலை என்றும் பெயர். மேற்கூறிய இரண்டு முன்னிலைகளிலும் அடங்காமல்,

1. 'மற்றுனக்கு மயக்கமென் வன்னெஞ்சே?'
2. 'நன் றென் றிரு மனமே'
3. 'நெஞ்சம் வாழி'
4. 'நிலையான நெஞ்சே'

எனத் தாயுமானுர், பட்டினத்தார், அப்பர், உமாபதி சிவாச்சாரியார் முதலிய பெரியோர்கள் மனத்தை விளிப்பதற்குக் காரணம் என்ன என ஆராயின், உலகின்கண்,

'விரிந்த பொருட்கெலாம் வித்தாவ துள்ளம்'

என்ற திருமூலர் திருமந்திர உண்மை மொழியின் நுட்ப உணர்வையும்,

'நல்லது செய்து நரரை யுயர்த்தவும்
அல்லது செய்துஅங்' களற்றிடை யாழ்ப்பவும்
வல்ல திந்த மனமலது ஐயனே யில்லை

எனப் பிரபுலிங்கலீலை செய்த சிவப்பிரகாசரின் சிறந்த

கெட்டிய வரையில், இலக்கணத்திற்கும், மெய்யறிவு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையும், ஒப்பிய அமைப்புக்களையும் எடுத்துக்காட்டினேன். இலக்கண இலக்கியங்கள் கற்றறிந்த வல்லார் இத்துறையில் ஆராய்ச்சி செய்து நம்மொழியின் செழுமையும் சிறப்பும் மக்கள் உணர விளக்கியருளக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொரு ளாழத்தின் தன்மையையும் நாடிப் பார்க்கு மிடத்துப், பெரியோர்கள் மனத்தைத் திருத்தின் மற்றைய கருவிகள் கட்டுப்பட்டு ஒழுங்கு மீறுது உண்மைப் பொருளைக் கண்டு இன்புற வழி யுண்டாகும் என்பதை யுட் கொண்டாராய், மனத்தைப் பார்த்துக் கூறுவா ராயினர். இது மட்டுமா? 'மனம் கருவி ஆதலால், மனப் போக்கினைக் கேட்டு நீங்கள் நடவாதீர்கள், மனத்தை உயர் நோக்கின் படி ஏவ உடனே இட்ட கட்டளைப்படி நிறைவேற்றக் குறிப் பறிந்து நிற்கும் வேலையாள் போலப் பக்குவப்பட்டுப் பணிவுடன் மனம் பண்படவேண்டும்' என்றும் குறிப்பித் தார்க ளென்றலும் இழுக்காகாது.

இதனை யறிந்த பேரறிஞர், 'நெஞ்சு விடு தூது' எனப் பெயரிய ஞான நூல் ஒன்றை ஞாலத்திற்கு ஈந்தருளியுள்ளார். இன்பியலில், இணையிலா நம் வள்ளுவர் நெஞ்சொடு கிளத்தல் எனத் தனி அதிகாரம் ஒன்றில், நெஞ்சை விளிக்கும் குறள்கள் நிரையாக நெஞ்சை யள்ள உணர்த்துவனவற்றை உணரார் யார்?

இன்றும் ஒரு முறை ஒரு பொருளைப்பற்றி மனத்திற் பதித்துவிட்டால். மறுபடி இடையிலே சின்னுள், பன்னுள் சென்று அப் பொருளைப் பார்த்தவுடன் முதன் முதல் பார்த்த இடம், பொரு ளியல்பு முதலியன ஒருசேர நினைவுக்கு வருவது இயல்பல்லவா? ஆகையால் கூறினுர் என்றலும் மொன்று. மேலும், பெரியோர், வேலையாள், நெருங்கிய உறவினர், நட்பினர் இவர்கள் யாவராயினும் சிற்சில பொழுது விலகியிருக்க நேரிடும். இவர்களில் இடுக்கண் உற்ற இடத்தில் பிரிவதும் உண்டு. ஆனல் எக் காலத்தும் பிரியாது உடனிருந்து உதவும் ஆற்றல் மனத்திற் குண்டு என்ற கருத்தால், விளித்தார் என்று கொள்வதும் சாலும்.

வடமொழியில் மனம்—அகம் எனப் பெயர் கூறுவர். இதைக் குறிக்கும் 'சப்தம்' என்ற நூலில் விளிவேற்றுமை கிடையாது. ஏனென்றல், உலகில் மனத்தை விளிப்பது கிடையாது. உலகத்தைக் கடந்தவரே விளித்தல் பொருந்தும்? ஆகையால், விளிக்கவில்லை என வடமொழி யறிஞர் ஒருவர் கூறினுல், அதனையும் ஒப்புநோக்கி ஆராயின் உண்மை புலனுகும்.